**முதலாவது கூடுதல்  சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 219/2021**

**Witness PW 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தண்டபாணி | தொழில் | |
| த/பெ | கிருஷ்ணன் | வயது | |
| ஊர் | | தேதி | 06.03.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (06.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற சம்மனின் பேரில் நீதிமன்றத்தில் தற்பொழுது சாட்சியம்அளிக்கிறேன். வாதி மற்றும் பிரதிவாதிகளை எனக்கு தெரியும். முருகன் என்பவரது அக்காவின் கணவர் நான். 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளின் தந்தையான கோவிந்தன் என்பவரது தங்கையின் கணவர் நான் எனது மனைவியின் பெயர் கோவிந்தம்மாள். முருகன் என்பவர் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். கோவிந்தன், கோவிந்தம்மாள், முருகன் ஆகியோரது தகப்பனார் பெயர் சுப்பராயன். முருகன் என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்துக்கள் அனைத்தும் சுப்பராயன் என்பவரது சொத்துக்கள். சுப்பராய கவுண்டர் இறந்த பிறகு கோவிந்தன், கோவிந்தம்மாள், முருகன் ஆகியோருக்குள் பாகபிரிவினை

எதுவும்நடைபெறவில்லை. எனது மனைவி கோவிந்தம்மாள் என்பவர் கோவிந்தன் என்பவரது பெயரில் ஒரு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். வாதி விடுதலை பத்திரம் எழுதி தரும்போது வாதி மைனர் என்பதால் அவரது பெயரை சேர்த்து விடுதலை பத்திரம் எழுதி கொடுக்கவில்லை. சுப்பராயன் என்பவர் இறந்தபிறகு சொத்துக்களின் கோவிந்தன் மற்றும் முருகன் ஆகியோருக்கு சம பாகம் உரிமை உள்ளது. வா.சா. ஆ 12 எனது பேத்தியின் மஞ்சள் நீராட்டு விழாவின் பத்திரிக்கை அதில் வாதிமற்றும் பிரதிவாதிகள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram